www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

Tsi6T

02-04-24

# தென்காசி மாவட்டம்

## தொகுத்தறித் தேர்வு - 2024

-----

## வகுப்பு 6

## தமிழ்

கால அளவு: 2.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5×1=5

1) தேசம் உடுத்திய நூலாடை என்று கவிஞர் தாராபாரதி குறிப்பிடும் நூல்

அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

2) 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........

அ) தானெ + என்று ஆ) தா + னென்று

இ) தான் + என்று ஈ) தான் + னென்று

3) வாழ்வில் உயர கடினமாக ........... வேண்டும்.

அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

4) இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ............

அ) இன்உயிர் ஆ) இனிய உயிர்

இ) இன்னுயிர் ஈ) இனிமை உயிர்

5) அன்னை தெரசாவிற்கு ..............க்கான நோபல் பரிசு கிடைத்தது

அ) அமைதி ஆ) பொருளாதாரம் இ) இயற்பியல் ஈ) மருத்துவம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 3×1=3

6) காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் ............

7) மணிமேகலை கையில் இருந்த அமுத சுரபியில் உணவு இட்ட பெண் ............

8) தன் பொருளைக் கவர்ந்தவரிடமும் அன்பு காட்டியவர் .............

**இ) சொற்றொடரில் அமைத்து எழுதுக.** 2×1=2

9) செடிகொடிகள்

10) உரிமை

**ஈ) பொருத்துக.** 5×1=5

11) இலக்கிய மாநாடு - பாரதியார்

12) குழந்தைகளைப் பாதுகாப்போம் - சென்னை

13) தமிழ்நாட்டுக் கவிஞர் - ஜி.யு.போப்

14) குற்றாலம் - கைலாஷ் சத்யார்த்தி

15) தமிழ்க்கையேடு - அருவி

**உ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.** 4×2=8

16) தாராபாரதி பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

17) இன்பநிலை எப்போது வந்து சேரும்?

18) பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?

19) அமுத சுரபியின் சிறப்பு யாது?

20) ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

21) ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

ஊ) பின்வரும் மனப்பாடப் பாடலினை அடிபிறழாமல் எழுதுக **4+2=6**

22) 'தம் உயிர்போல்' மற்றும் 'எல்லாரும்' எனத் தொடங்கும் பராபரக் கண்ணி பாடல்களை எழுதுக.

23) 'பகுத்துண்டு' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

எ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. **2×2=4**

24) சொற்களின் வகைகளை எழுதுக.

25) அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

26) உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

ஏ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. **3×3=9**

27) காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

28) பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

29) மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

30) பறவைகளும், விலங்குகளும் சுதந்திரமாக வாழ நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

31) கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெற தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?

ஐ) பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக. **2×5=10**

32) வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

33) 'பாதம்' - கதையினைச் சுருக்கி எழுதுக.

34) 'தேசிய ஒருமைப்பாடு' - கட்டுரை எழுதுக.

(அல்லது)

35) நூல்கள் அனுப்ப வேண்டி பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.

ஒ) பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. **4×2=8**

36) **தமிழ்க் கலைச்சொல் எழுதுக.**

அ) Trust ஆ) Lorry

37) **பின்வரும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.**

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு

38) **பின்வரும் சொற்களுக்கு இருபொருள் தருக.**

அ) திங்கள் ஆ) நகை

39) **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து ஐந்து வரிகளில் கவிதை எழுதுக.**

அ) அன்பு ஆ) நட்பு

- - - - - - - -

www.Padasalai.Net